## விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு

## தமிழ்த்துறை

### பி.ஏ., பி.எஸ்.சி., முதலாமாண்டு முதற்பருவம் - சிறப்புத்தமிழ் - 1

### தமிழ் மொழியின் அடிப்படைக் கூறுகளும் தமிழ் இலக்கிய வரலாறும் - LTNE1A

நேரம் : 3மணி மதிப்பெண் : 75

**பகுதி – அ**

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி :- (10 x 1 =10)

1. எழுத்தின் வகை எத்தனை?
   அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

2. உயிர் எழுத்துக்கள் மொத்தம்?
   அ) 12 ஆ) 13 இ) 14 ஈ) 15

3. மெய் எழுத்துக்கள் மொத்தம்?
   அ) 18 ஆ) 19 இ) 20 ஈ) 21

4. உயிர் எழுத்துக்களில் ஏதாவது ஒன்று?
   அ) உ ஆ) ஞ இ) கு ஈ) வ

5. மெய் எழுத்துக்களில் ஏதாவது ஒன்று?
   அ) ச் ஆ) அ இ) உ ஈ) எ

6. குறில் எழுத்து எத்தனை?
   அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8

7. நெடில் எழுத்து எத்தனை?
   அ) 7 ஆ) 8 இ) 9 ஈ) 6

8. வல்லின எழுத்து எத்தனை?
   அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9

9. மெல்லின எழுத்து எத்தனை?

அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9

10. இடையின எழுத்து எத்தனை?

அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9

## <u>பகுதி – ஆ</u>

II. <u>ஏதேனும் ஐந்தினக்கும் விடை தருக :-</u> (5 x 2 = 10)

11. முதலில் தோன்றிய எழுத்து என்னவாக அழைக்கப்படும்.

12. உயிர் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?

13. குறில் எழுத்துக்கள் மொத்தம் எத்தனை?

14. நெடில் எழுத்துக்கள் மொத்தம் எத்தனை?

15. வல்லின எழுத்துக்கள் மொத்தம் எத்தனை?

16. மெல்லின எழுத்துக்கள் மொத்தம் எத்தனை?

17. இடையின எழுத்துக்கள் மொத்தம் எத்தனை?

## <u>பகுதி - இ</u>

III. <u>அனைத்து வினாக்களுக்கும் விடையளி :-</u> (3 x 9 = 27)

18. அ) எழுத்துக்களின் வகைகளைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

ஆ) சார்பெழுத்துக்கள் என்றால் என்ன?

19. அ) பத்துப்பாட்டு நூல்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

**(அல்லது)**

ஆ) எட்டுத்தொகை நூல்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

20. அ) திருக்குறளின் முப்பால் பெயர்களைக் குறிப்பிடுக.

**(அல்லது)**

ஆ) நாலடியாரின் முப்பால் பெயர்களைக் குறிப்பிடுக.

**பகுதி - ஈ**

IV. **ஏதேனும் இரண்டினுக்கு மட்டும் விடைதருக :-** (2 x 14 = 28)

21. ஐம்பெரும் காப்பியங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

22. ஐஞ்சிறு காப்பியங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

23. இராமன் கடைக்குச் சென்றான் - சரியான வாக்கியமாக மாற்றுக.

24. சீதை மானைத் தேடி ஓடினான் - சரியான வாக்கியமாக மாற்றுக.

※※※※※

# விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு

# தமிழ்த்துறை

பி.ஏ., பி.எஸ்.சி., முதலாமாண்டு முதற்பருவம் - சிறப்புத்தமிழ் - 1

## நீதி இலக்கியமும் தமிழ் இலக்கிய வரலாறும் - தாள் -1 (LTNE1B)

நேரம் : 3மணி மதிப்பெண் : 75

### பகுதி - அ

I. சரியான விடையைத் தெரிவுசெய்து எழுதுக. (10X1=10)

1. திருக்குறளில் அறத்துப்பாலில் இடம் பெற்ற அதிகாரங்களின் எண்ணிக்கை யாது?
   அ.70 ஆ.25 இ.60 ஈ.38
2. உயிரினும் மேலாகக் கருதப்பெறுவது எது?
   அ.அன்பு ஆ.அருள் இ. ஒழுக்கம் ஈ. மேன்மை
3. நாலடியார் என்ற நூலின் ஆசிரியர் யார்?
   அ.பதுமனார் ஆ.சமணமுனிவர்கள் இ.சைவதுறவிகள் ஈ.ஆழ்வார்கள்
4. நாலடியாரில் இடம் பெற்ற பாடல்களின் எண்ணிக்கை யாது?
   அ.400 ஆ.330 இ.133 ஈ.100
5. ஆற்றுப்படை நூல்களின் எண்ணிக்கை யாது?
   அ.5 ஆ.10 இ.15 ஈ.8
6. நக்கீரர் இயற்றிய நூல் எது?
   அ.சிறுபாணாற்றுப்படை ஆ.திருமுருகாற்றுப்படை
   இ.பெரும்பாணாற்றுப்படை ஈ.பொருநராற்றுப்படை
7. தமிழின் முதல் சமயக் காப்பியம் எது?
   அ.வளையாபதி ஆ.சீவகசிந்தாமணி இ.சிலப்பதிகாரம் ஈ.மணிமேகலை
8. சிலப்பதிகாரத்தில் எத்தனை காதைகள் இடம்பெற்றுள்ளன?
   அ.33 ஆ.44 இ.30 ஈ.40
9. காரைக்கால் அம்மையார் யாரை முழுமுதற் கடவுளாக வழிபட்டார்?
   அ.இயேசு ஆ.சிவன் இ.திருமால் ஈ.புத்தர்
10. திருமாலை வழிபடக் கூடியவர்களை எவ்வாறு அழைப்பர்?
    அ.சைவர் ஆ.பௌத்தர் இ.சமணர் ஈ.வைணவர்

## பகுதி - ஆ

II.எவையேனும் ஐந்தனுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக. (5X2=10)

11. திருக்குறளின் வேறு பெயர்கள் இரண்டினைத் தருக.
12. எது அழகு என நாலடியார் மொழிகிறது?
13. அன்பிற்கு எது இல்லையென குறள் மொழிகிறது?
14. இரட்டைக்காப்பியங்கள் எவை?
15. பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் இரண்டினைத் தருக?
16. ஆழ்வார்கள் வரிசையில் இடம் பெற்றுள்ள பெண் யார்?
17. சைவசமயம் வளர்த்த நாயன்மார்கள் எத்தனை பேர்?

## பகுதி - இ

III. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (3X9=27)

18. அ. அன்புடைமை அதிகாரம் குறித்த கருத்துக்களைத் தருக. (அல்லது)

ஆ. உலகப்பொதுமறை குறித்து நீவிர் அறிவனவற்றை எழுதுக?

19. அ. நாலடியார் பற்றி நூற்குறிப்பு தருக? (அல்லது)

ஆ. கல்வி குறித்து நாலடியார் சுட்டுவதை சுருக்கி எழுதுக?

20. அ. சிலப்பதிகாரம், மணிமேகலை குறித்து எழுதுக ? (அல்லது)

ஆ. திருஞானசம்பந்தர் பற்றி குறிப்புத் தருக?

## பகுதி - ஈ

IV.எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விரிவான அளவில் விடை தருக. (2X14=28)

21. ஒழுக்கமுடைமை அதிகாரத்தின் வழி வள்ளுவர் தரும் செய்திகளைப் புலப்படுத்துக.

22. ஆற்றுப்படை நூல்கள் குறித்து விளக்குக.

23. ஐம்பெரும் காப்பியங்கள் குறித்த செய்திகளை விவரித்து எழுதுக.

24. எட்டுத்தொகையில் உள்ள அகநூல்கள் குறித்து புலப்படுத்துக.

## விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு

# தமிழ்த்துறை

பி.ஏ.,பி.எஸ்.சி., முதலாமாண்டு முதற்பருவம் - பகுதி-1

**இக்காலக் கவிதையும் உரைநடையும் - தாள் -1 (P1LT11/P1CT11)**

**நேரம் : 3மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி - அ**

I. சரியான விடையைத் தெரிவுசெய்து எழுதுக. (10X1=10)

1. நடிப்புச் சுதேசிகள் என்ற கவிதை எதனைக் கருப்பொருளாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது?
   அ.புகழ்தல் ஆ.அறிவுறுத்தல் இ. பழித்தறிவுறுத்தல் ஈ.இகழ்தல்
2. அரசன் சண்முகனார் பிறந்த ஊர் எது?
   அ.சோழவந்தான் ஆ.திருவேடகம் இ.குவளைக்கண்ணி ஈ.மதுரை
3. அன்னை கவிதையின் ஆசிரியர் யார்?
   அ.சிற்பி ஆ. வைரமுத்து இ.கண்ணதாசன் ஈ.சுரதா
4. உரசப்பயந்து ஒய்ந்து கிடந்தால் விளக்கு எதை விவாகரத்து செய்கிறது?
   அ.எண்ணெய் ஆ.தீபம் இ.தண்ணீர் ஈ.தீக்குச்சி
5. தன்னை நல்ல நிலைக்கு மாற்றிக்கொள்ளும் பருவம் எது?
   அ.குழந்தை ஆ.முதிர்வு இ.இளமை ஈ.பாலகன்
6. குருபக்திக்கு சிறந்தவராக யாரைக் குறிப்பிடுகிறார்?
   அ.அர்ச்சுனன் ஆ.பீமன் இ.நகுலன் ஈ.ஏகலைவன்
7. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை?
   அ.30 ஆ.216 இ.22 ஈ.24
8. உயிரெழுத்துக்களில் நெடில் எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?
   அ.7 ஆ.5 இ.3 ஈ.4
9. புதுக்கவிதையின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
   அ.பாரதியார் ஆ.ந.பிச்சமூர்த்தி இ.சி.மணி ஈ.புவியரசு
10. 'ஐடன்டிபிகேஷன் சர்டிபிகேட்' பிற மொழிச்சொற்களை நீக்கி எழுதுக.
    அ.ஆளறி மனு ஆ.ஆளறிச் சான்றிதழ்
    இ.அடையாள அட்டை ஈ.அடையாளசீட்டு

## பகுதி - ஆ

II.எவையேனும் ஐந்தனுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக. (5X2=10)

11. பாரதிக்குப் பிடித்த புலவர்கள் யார்?
12. தீவினை இருட்டை போக்க வந்த ஞான தீபம் யார்?
13. கவிஞர் முருகுசுந்தரம் குழந்தைப் பருவத்தில் எதனை வியப்போடு பார்த்தார்?
14. பட்டணத்தில் கிடைக்காத தின்பண்டங்கள் எவை?
15. மனதை முறையாகக் கிளறினால் அது எதற்கு ஒப்பாகும் என சித்பவானந்தர் மொழிகிறார்?
16. உயிரெழுத்துக்களில் குறில், நெடில் எழுத்துக்களை எழுதுக?
17. மரபுக்கவிஞர்கள் இருவர் பெயர்களைக் குறிப்பிடுக.

## பகுதி - இ

III. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (5X5=25)

18. அ. பாரதியின் 'தமிழ்' கவிதை குறித்த கருத்துக்களை விளக்குக. (அல்லது)

ஆ. கோயில் வழிபாடு குறித்து கவிமணி மொழிவனவற்றைச் சுட்டுக.

19. அ.'கிழக்கு விழிக்கும் நேரம்' கவிதையின் பொருளினை எடுத்துரைக்க? (அல்லது)

ஆ. சுதந்திர தாகமாக கவிஞர் மு.மேத்தா கூறுவது யாது?

20. அ. குருபக்தி - சுவாமி சித்பவானந்தர் வழி நின்று எடுத்துரைக்க? (அல்லது)

ஆ. 'கடவுள் வணக்கம்' என்ற தலைப்பில் சுவாமி சித்பவானந்தர் கூறிய கருத்துகளை வெளிப்படுத்துக.

21. அ. மொழி இறுதி எழுத்துகள் குறித்து விளக்குக. (அல்லது)

ஆ. வல்லெழுத்து மிகா இடங்கள் குறித்து எழுதுக.

22. அ. தமிழின் புதுக்கவிதை தோற்றம் வளர்ச்சி குறித்து எழுதுக. (அல்லது)

ஆ. 'நல்ல மாணாக்கன்' என்ற தலைப்பில் புதுக்கவிதை ஒன்று படைக்க.

## பகுதி - ஈ

IV.எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான அளவில் விடை தருக. (3X10=30)

23. 'நீங்களே சொல்லுங்கள்' கவிதை வெளிப்படும் தொழிலாளர்களின் துன்பநிலைகளைப் புலப்படுத்துக.

24. 'அன்னை' கவிதை குறித்து ஆசிரியர் மொழிந்தனவற்றை விவரித்து எழுதுக.

25. 'புலனடக்கம்' சுவாமி சித்பவானந்தர் வழிநின்று விரித்து எழுதுக.

26. சார்பெழுத்துக்களின் வகைகளைச் சான்று தந்து விளக்குக.

27. இருபதாம் நூற்றாண்டில் மரபுக்கவிதையின் வளர்ச்சி குறித்து புலப்படுத்துக.

விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு.

# தமிழ்த்துறை

பி.ஏ.,பி.எஸ்.சி., இரண்டாமாண்டு மூன்றாம்பருவம் பகுதி-1

காப்பியமும் பக்தி இலக்கியமும் நாடகமும் - தாள் - 3

(P1LT31/P1CT31)

நேரம் : 3மணி மதிப்பெண் : 75

பகுதி - அ

I. சரியான விடையைத் தெரிவுசெய்து எழுதுக. (10X1=10)

1. 'வழக்குரை காதை' இடம்பெறும் காண்டம் எது?

அ.வஞ்சிக்காண்டம் ஆ.மதுரைக்காண்டம் இ.புகார்க்காண்டம் ஈ.பாலகாண்டம்

2. வாய்மையும் மரபுங் காத்தவன் யார்?

அ.இராமன் ஆ.பரதன் இ.தசரதன் ஈ.இலக்குவன்

3. பராபரக்கண்ணி யினை இயற்றியவர் யார்?

அ.ஆண்டாள் ஆ.மாணிக்கவாசகர் இ.திருமூலர் ஈ.தாயுமானவர்

4. வரியணி நயனி நன் மலைமகள் யார்?

அ.சரஸ்வதி ஆ.இலட்சுமி இ.உமாதேவி ஈ.மாரியம்மன்

5. துரோணருக்கு கட்டை விரலை காணிக்கையாகக் கொடுத்தவன் யார்?

அ.அர்ச்சுனன் ஆ.ஏகலைவன் இ.தர்மன் ஈ.சகாதேவன்

6. 'மௌனத்தின் குரலொன்று' நாடக ஆசிரியர் யார்?

அ.சேதுபதி ஆ.கர்ணன் இ.இந்திரன் ஈ.சந்தின்

7. ஒட்டணியின் மற்றொரு பெயர் யாது?

அ.உவமை ஆ.சிலேடை இ.வேற்றுமை ஈ.பிறதுமொழிதல்

8. 'ஏ' காரத்தில் முடியும் பாவகை எது?

அ.வஞ்சிப்பா ஆ.கலிப்பா இ.வெண்பா ஈ.ஆசிரியப்பா

9. திருவாசக நூலின் ஆசிரியர் யார்?

அ.மணிவாசகர் ஆ.அப்பர் இ.சுந்தரர் ஈ.சம்பந்தர்

10. வைணவ அடியார்கள் எவ்வாறு அழைக்கப்பெறுகின்றனர்?

அ.ஆழ்வார்கள் ஆ.நாயன்மார்கள் இ.நம்பூதிகள் ஈ.பெரியவர்கள்

பகுதி - ஆ

II.எவையேனும் ஐந்தனுக்கு ஓரிரு தொடர்களில் விடை தருக. (5X2=10)

11. ‘ஆமகன் அல்லன் என்மகன்’ என்று கூறியவர் யார்?

12. வாலிவதைப் படலத்தில் வரும் கதை மாந்தர்கள் யார்?

13. கண்ணனின் வளர்ப்பு தாய் தந்தையர் யார்?

14. பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்தவன் யார்?

15. ‘மௌனத்தின் குரலொன்று’ நாடக மாந்தர்களைக் குறிப்பிடுக?

16. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?

17. முதல் ஆழ்வார் மூவர் யார்?

பகுதி - இ

III. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (5X5=25)

18. அ. கோப்பெருந்தேவி கண்ட கனவு பற்றி எழுதுக. (அல்லது)

ஆ. ஆபுத்திரன் பிறப்பினை சாத்தனார் வழி சுருக்கி வரைக.

19. அ. திருமந்திரப் பாடல் ஏதேனும் ஐந்தின் கருத்தை எடுத்துரைக்க. (அல்லது)

ஆ. நும் பாடப்பகுதியில் உள்ள தாயுமானவரின் பராபரக்கண்ணி குறித்த செய்திகளைத் தருக.

20. அ. ஏகலைவனின் குருபக்தி குறித்து விளக்குக. (அல்லது)

ஆ. பிட்டுக்கு மண் சுமந்த நிகழ்வினை வைகையில் வெள்ளம் வரும் நாடகம் வழி விளக்குக.

21. அ. வேற்றுமை அணியினைச் சான்று தந்து விளக்குக. (அல்லது)

ஆ. பல்கலைகழக அளவில் முதல்மதிப்பெண் பெற்ற உன் நண்பனை வாழ்த்தி மடல் வரைக.

22. அ. இரட்டைக் காப்பியங்கள் குறித்து எழுதுக. (அல்லது)

ஆ. வைணவ சமயத்தில் ஆண்டாள் குறித்த செய்திகளைத் தருக.

## பகுதி - ஈ

IV.எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான அளவில் விடை தருக. (3X10=30)

23. கண்ணகி தன்னுடைய வழக்கினை பாண்டிய மன்னனிடம் எடுத்துரைத்த பாங்கினை ஆராய்க.

24. ‘திருப்பாவை’ வாயிலாக ஆண்டாளின் பக்தித் திறத்தினைப் புலப்படுத்துக.

25. ‘நீயே தான் இந்த பிரபஞ்சம்’ - பாத்திரங்களின் பண்புகளைப் புலப்படுத்துக.

26. வெண்பா என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்று தந்து விளக்குக.

27. சைவம் வளர்த்த நாயன்மார்கள் நால்வர் குறித்த செய்திகளை விவரிக்க.